விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ்: 112

யாழ்ப்பாணம் வைகாசி 22 ஜ. அவ். 13 புதன்கிழமை 5-6-74

JAFFNA ... GRADUATE LIBRARY 5 JUN 1974

## ★ ★ டாக்டர்கள் சட்டப்படி வேலை

### கொழும்பில் இன்று ஆரம்பம்

கொழும்பு, செவ்

2100 அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தை கொழும்பில் இன்று ஆரம்பிக்கவிருப்பதாக மேற்படி சங்கச் செயலாளர் டாக்டர் எஸ். சிவகுமாரன் நேற்றுத் தெரிவித்தார். இன்று ஆரம்பமாகும் இந்த இயக்கம் இம்மாதம் 10ம் திகதிக்குள் நாடெங்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்

டாக்டர்களுக்கான புதிய சம்பளத்திட்டத்தை நிராகரிப்பதென்றும் இச்சங்கம் முடிவு செய்துள்ளது.

புதிய சம்பளத்திட்டப்படி உடனடியாக சாதாரண டாக்டர்களுக்கு முன்னர் கிடைத்ததைவிட சம்பளத்தில் 10 ரூபா துண்டுவிழும்; அத்துடன் டாக்டர்களுக்கு 9 முதல் 15 வது வருடம் வரைகிடைக்கும் 25 ரூபா சம்பள உயர்வு இல்லாமற் போகின்றது என்று இச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஈ)

அந்நிய செலாவணி மோசடி:

# 4 இலங்கையரைத் தேடி உலக நாடுகளில் வேட்டை

கொழும்பு, செவ்வாய்

அந்நிய செலாவணி மோசடிசம்பந்தமாக இலங்கையர் நால்வரைத்தேடி உலக நாடுகளில் வலைவிரிக்கப்பட்டுள்ளது. இந்த நால்வரும் பெருந்தொகையான ஸ்ரேலிங் பவுண்களையும் டொலர்களையும் மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது.

பாரிஸிலுள்ள சர்வதேச கள்ளக்கடத்தல் தடுப்பு தலைமைக் காரியாலயம் ஊடாக நாட்டின் சகல பகுதிகளுக்கும் இவர்கள் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களின் பெயர் விபரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடைசியாகக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின்படி சந்தேக நபர்கள் நால்வரும் அண்மையில் மத்திய கிழக்கு தூரகிழக்கு நாடுகளில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நால்வரும் கள்ள மார்க்கட்டில் இலங்கைக்குள் பெருந்தொகைப் பணத்தை விற்றுள்ளதையும், வெளிநாடுகளில் வங்கிக் கணக்குகளை வைத்திருப்பதையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம். (ஈ)

## விமான நிலையத்தில் சோடா கொடுத்தவருக்கு ரூபா 500 அபராதம்

யாழ்ப்பாணம், புதன்

சுங்க அதிகாரிகளினால் சோதனையிடப்பட்டு முடிந்த பின்விமானத்தில்ஏறச்சென்ற ஒரு பிரயாணியிடம் சோடா ஒன்றைக் கொடுத்த ஒருவருக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குறிப்பிட்ட சோடாப் போத்தலை அப்பிரயாணியிடம் கொடுத்ததுப், அதனைக் கவனித்துக் கொண்டிருந்த சுங்க அதிகாரிகள் அப்போத்தலை வாங்கிச் சோதனையிட்டனர். அப்போது அதனுள் பெறுமதி வாய்ந்த, தங்கமோதிரம் ஒன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. சந்தேகநபரை சுங்க கலெக்டர் திரு. எண். எம். ஜே. செனிவிரத்தின முன்னிலையில் ஆஜர் செய்தபோது மோதிரத்தைப் பறிமுதல் செய்து, சோடாப் போத்தலைக் கொடுத்தவருக்கு 500 ரூபா அபராதமும் விதித்தார். [ஈ]

## குதிரையிலிருந்து இந்திரா விழுந்தார்

### விரல் முறிந்தது

புதுடில்லி, ஜூன் 4

இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி இன்று குதிரையிலிருந்து விழுந்து கைவிரல் ஒன்றின் எலும்பை முறித்துக் கொண்டார்.

விடுமுறையைக் கழிப்பதற்காக சிம்லாவுக்குச் சென்றுள்ள பிரதமர் குதிரையில் ஏறிசவாரி செய்யும் போது கீழேவிழுந்தார். அதனால் அவரது கைவிரல் ஒன்றில் காயம் ஏற்பட்டது. எக்ஸ்றே படம் எடுத்துப் பார்த்ததில் விரல் எலும்பு முறிந்திருப்பதாகவும், ஆனால் காயம்சிறியதுதான் என்றும் டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

பிரதமர் இந்திரா பின்னர் கையில் 'பான்டேஜ்' போட்டுக் கொண்டு தமது குடும்பத்தினருடன் சேர்ந்து கொண்டார்.

## 'உங்கள் கருத்துகளை அரசாங்க அதிபரிடம் தெரிவியுங்கள்'

### மக்கள் குழுக்களுக்கு யாழ். எம். பி. ஆலோசனை

யாழ்ப்பாணம், புதன்

''மக்கள்கமிட்டி அங்கத்தவர்கள் மக்களின் காவலர்கள் போன்றவர்கள். மக்களின் குறைநிறைகளை அவர்களால் அறியவும் உணரவும் முடியும். அரசாங்க தனியார்துறைகளில் நிலவும் சீர்கேடுகள், ஊழல்கள், மோசடிகளைக் கண்டுபிடிப்பதுடன் அவற்றை ஒழிக்க தகுந்த ஆலோசனைகளையும் வழங்கும் தகுதியினை மக்கள் குழுவினர் உடையவர்கள். எனவே அவர்களின் செயல்பாட்டில் இருக்கும் தடைகள், இடையூறுகள் தவிர்க்கப்படவேண்டும்.''

இவ்வாறு நேற்று முன்தினம் பிற்பகல் மக்கள் கமிட்டி ஆணையாளர் திரு. குணரத்னவுக்கு யாழ். எம். பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டினின் இல்லத்தில் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தின் போது திரு. மார்ட்டின் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசப், யாழ். காரியாதிகாரி திரு. ஆர். யோகநாதன், யாழ். மக்கள் கமிட்டித் தலைவர்கள், மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

திரு. மார்ட்டின் எம். பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:

''எல்லா விடயங்களிலும் மக்கள் மத்தியில் இருக்கும் குறைபாடுகளை அரசாங்க அதிகாரிகளினால் மட்டும் தீர்க்கமுடியாது. எனவே மக்கள் கமிட்டி மூலம் இவ்விஷயங்களை அணுகித் தீர்வு காண முடியும்.

### அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கவும்

''எம்மிடையே அரசியல் வேறுபாடுகள் இருக்கலாம். அரசியல் எதிரிகளும் இருக்கலாம் அரசாங்க அதிபர் மத்திய அரசின் பிரதிநிதி. அவர் கட்சி சார்பற்ற முறையில் சரி எது; பிழை எது என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து நீதியாகச் செயல்படும் தன்மையும் தகைமையும் உடையவர். எனவே மக்கள் குழுத் தலைவர்கள் ஒன்றிணைந்து தமது குறைபாடுகள், ஊழல்கள். ஆலோசனைகள் போன்றவற்றை அரசாங்க அதிபர் மூலம் அணுகுவதே சாலவும் பொருத்தமானது.

''அரசாங்க அதிபர் இவ்விஷயங்களை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கோ அல்லது மக்கள் கமிட்டி ஆணையாளருக்கோ அனுப்பி வைத்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல்கள் என்பவற்றை நீக்கி, நுகர்வுப் பொருட்கள் எவ்வித குறைபாடுகளுமின்றி ஒழுங்கான முறையில் பகிர்ந்தளிக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் படும்'' (த. அ)

## கருணாநிதி பிறந்தநாள் துக்கதினம்

சென்னை, ஜூன். 4

தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதியின் பிறந்தநாளான நேற்றைய தினத்தை அ. தி. மு. கவினர் துக்கதினமாகக் கொண்டாடினர்.

சென்னை நகரில் போடப்பட்டிருந்த தடை-உத்தரவை மீறி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய அ. தி. மு. க. வைச் சேர்ந்த 130 பேரை பொலிசார் கைது செய்தனர். பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

பெங்களூர் தமிழ்ச் சங்க நிதிக்கென முதல்வர் திரு. கருணாநிதி தனது பிறந்த தினத்தன்று 50 ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார்.

## சனசமூக நிலைய அதிகாரிகள் பயிற்சி பெறுவர்

கொழும்பு, செவ்.

சனசமூக நிலைய அதிகாரிகளுக்கு அரசாங்கம் பயிற்சி அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது

இப்போது நாடு முழுவதும் உள்ள சனசமூக நிலையங்கள் புதிதாகப் பதிவுசெய்யப்பட்டுவருகின்றன. இதுவரை அரசுக்கு இவற்றைப் பதிவு செய்வதெற்கென 2,500 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

சனசமூக நிலையங்களைப் பதிவுசெய்யும் வேலைகள் முடிவுற்ற பின்னர் நிலைய அதிகாரிகளுக்கு, சனசமூக நிலைய அமைப்பு முறை, நிர்வாகம் ஆகியன தொடர்பான பயிற்சிகளை அளிக்கவிருக்கிறது. ... ...

## 5-ம், 7-ம் பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, செவ்வாய்

ஐந்தாம், ஏழாம் தரங்களுக்கான புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்டபடி இம்மாதம் 22-ந் திகதி நடைபெறமாட்டாது. இப்பரீட்சைகள் ஜூலை மாதம் 6-ந் திகதி நடைபெறும் என்று பரீட்சைக் கமிஷனர் திரு. போகட பிரேமதாசா அறிவித்தார்.

பொதுப் பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சையை நடாத்தத் திட்டமிட்டிருப்பதாகவும், ஆனால் தற்போது

(4ம் பக்கம் பார்க்க)

## கமத்தொழில் சேவை நிலையங்கள் இயங்குவதில் தாமதம்

உடுப்பிட்டி, செவ்

வட பகுதியில் மூன்று மாதங்களுக்கு முன்னர் காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவினால் திறந்துவைக்கப்பட்ட கமத்தொழிற் சேவை நிலையங்கள் இன்னும் இயங்க ஆரம்பிக்காததால் விவசாயிகள் மிகவும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

இக்கமத்தொழிற் சேவை நிலையங்களைப் பரிபாலனம் செய்யும் விவசாயக்குழுக்கள் காணி விவசாய அமைச்சரினால் இன்றும் வெளியிடப்படாததே இதற்குக் காரணம் [illegible] புதிய விளைவுப்பெருக்கச் சட்டத்தின் கீழ் விவசாயக் குழு வந்த பின்னரே சரிவர இயங்க முடியுமென்றும் விவசாயக்குழு நியமனம் தாமதிப்பதால் பழைய விவசாயத்திட்டத்தின் படியே தாம் இயங்கிவரவேண்டியுள்ளதென்றும் விவசாய நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். வடபகுதியில் 9 கமத்தொழிற்சேவை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. [ஈ]

லண்டன், ஜூன் 4

இந்திய கிரிக்கட் கோஷ்டிக்கும் இங்கிலாந்து கோஷ்டிக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி இம்மாதம் 6-ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

## கம்போடிய கல்வி மந்திரி படுகொலை

நாம்பென், ஜூன் 4

கம்போடிய கல்வி மந்திரியும் அவரது பிரதம உதவியாளரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தீவிரமாணவர் இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் இவர்கள் இருவரையும் அமைச்சர் அலுவலகத்திலிருந்து கடத்திச் சென்று பலமணிநேரம் வைத்திருந்தபின் சுட்டுக் கொன்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு தினம்

திருமதி பொ. மகேஸ்வரி
(பிள்ளை)



எங்கள் அருமைத் தாயாரின் வருடாந்த திதியன்று ஞாபகப்படுத்துகின்றோம்.
பொ. சர்வா, பொ. கிருபா, பொ. புஸ்பராஜா. 56

## சிறு விளம்பரம்

மாணவ மாணவிகளுக்கு அடையாள அட்டைப் படங்கள் அரைச்சவாரில் 1-6-74 தொடக்கம் செய்து கொடுக்கப்படும் உரிமையாளர் . நடராஜா, ஸ்ருடியோ பிறின்செஸ் சுன்னாகம். 212

**கல்வி**

நவீன கணிதம், (தமிழில்) 6-ம் 7-ம், 8-ம், தேசிய கல்வித் தராதர வகுப்புகளுக்கும், பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களுக்கும் தபால்மூலம் போதனை மொடேர்ண் எடியூகேஷன் சென்ரர், தெல்லியடி, கரவெட்டி. 132

**விற்பனைக்கு**

யாழ். நகரில் 3 பரப்புக் காணியுடன் நவீனவசதிகளுடன் கூடிய புதிய வீடு விற்கப்படும். தொடர்பு கொள்க. சட்டத்தரணி தம்பிமுத்து பூபாலன், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 234

குருநேருட் காங்கேசன்துறையில் நடேஸ்வராக்கல்லூரி, சந்தை, புகையிரதநிலையம் ஆகியவற்றிற்கு அருகில் தென்னை, மாமரங்கள் உள்ள வீடு கட்டுவதற்குரிய 39 பரப்புக் காணி மொத்தமாகவும், துண்டுகளாகவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி கனகரத்தினம், "கோம்லன்ட்", நாவற்குழி, கைதடி. 235

எங்களிடம் எல்லாவிதமான மரக்கறிவிதைகள், உரவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ரீ. சண்முகநாதன் அன்கோ, 134, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: No. 7181. 230

### தேவை

ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 8 பரப்பு காணியுடன் வீடும் உண்டு இதற்கு ஈட்டிற்கு ரூபா 10,000 தேவை. அல்லது தகுந்த விலைக்கு வாங்கலாம். கற்பகதரு, 136, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 203

### ஆர்டர்கள்.

சிறந்த முறையில் நங்கையருக்கான ஆடைகள், புளொக்குகள் ஆர்டருக்குச் செய்து கொடுக்கப்படும். தையல்நிலையம், 24, மானிப்பாய் றோட், (முட்டாசிச்சந்திக்கருகாமையில்), யாழ்ப்பாணம். 238

### தேவை

மக்கள்வங்கியின் எக்கிளையிலாயினும் 6 மாதத்திற்கு மேல் முதலீட்டுச் சேமிப்புக் கணக்கு (ISA) வைத்திருப்பவர்கள் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும். அம்பிகைபாகர், முக்குறுணிப் பிள்ளையார் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 219

## 1973-ம் ஆண்டின் 44ம் இலங்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின் கீழ் மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்குவதற்கான இடைக் காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை றோட் கில்னர் லேன் 10-ம் இலக்கத்தில் வசித்த காலஞ்சென்ற ஆறுமுகம் தில்லையம்பலம் என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்கள் மற்றும் பெறுமதிகள் சம்பந்தப்பட்டவை.
(காலஞ்சென்றவர்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி கில்னர் லேன் 10-ம் இலக்கத்தில் வசிக்கும் ஆறுமுகம் தில்லையம்பலம் கைம்பெண் மங்கையற்கரசு
மனுதார்

வலயம்: யாழ்ப்பாணம்
(மாவட்ட நீதிமன்றம்
ரி/2967)

எதிராக

1. நவரத்தினராசா கைம்பெண் மகாலட்சுமி,
2. தில்லையம்பலம் மகள் தில்லைநாயகி,
3. தில்லையம்பலம் மகள் பரமேஸ்வரி,

(பராயமற்றவர்)

4. தில்லையம்பலம் சிவகுமாரன்,

இவர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி கில்னர் லேன் 10-ம் இலக்கத்தில் வசிப்பவர்கள். 4-ம் பிரதிவாதி பராயமற்றவர் அவரது பாதுகாவலர் 5-ம் பிரதிவாதி

5. டாக்டர் வீ. விநாயகமூர்த்தி, கில்னர் ஒழுங்கை, காங்கேசன் துறை றோட், யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்

1973-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ம் திகதியிட்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய உறுதிக்கூற்றுக்கள் முதற்தோற்றத்தில் நிருபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்திப்பட்டதின் பேரில் மேலதிக நம்பிக்கைப்பொறுப்பாளராகிய எம். ஏ. எல்லேபொல ஆகிய நான் கட்டளையிடுகிறதாவது:-

இக்கட்டளையைப் பெற்ற எவராவுதல் அல்லது வேறு எவராவுதல் 1974-ம் ஆண்டு ஆனி மாதம் 11-ம் திகதி காலை 10 மணிக்கு அல்லது அதற்குமுன் தக்ககாரணங் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி

(அ) மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகத் தத்துவம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட மனுதாரே மேற்சொல்லப்பட்டவரின் கைம்பெண் என்றவகையில் உரித்துடையவரென்றும் அவ்வண்ணமே நிருவாகத்தத்துவப்பத்திரம் வழங்கப்படும் என்றும்,

(ஆ) இம்மரணச் சொத்து நடவடிக்கை சார்பாக மேற்சொல்லப்பட்ட 5-ம் பிரதிவாதி பராயமற்ற 4-ம் பிரதிவாதிக்குப் பாதுகாவலராக இவ்வழக்கில் நியமிக்கப்படுவாரெனவும் கட்டளையிடப்படுகின்றது.

(ஒப்பம்)
சோ. இராசநாதன்
மேலதிக நம்பிக்கைப் பொறுப்பாளர்

1974-ம் ஆண்டு வைகாசி மாதம் 9-ம் திகதி. 55


**ஸ்ரீ கிருஷ்ணா**
[பண்டத்தரிப்பு]
தினசரி 6-30, இரவு 9-30
சிவாஜி-சரோஜாதேவி நடித்த
**தேனும் பாலும்**

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி.ப. 2-30
எம். ஆர். ராதா ரஞ்சனி
**ரத்தக்கண்ணீர்**


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஆனந்த வருடம் வைகாசி மாதம் 26-ம் திகதி (9-6-74) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி தொடக்கம் 12 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| எனது புதல்வன் | எமது புதல்வி |
|---|---|
| அரியரத்தினம் | சிவகற்புக்கரசி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் நிகழவிருக்கும் திருமண வைபவத்திற்கு வருகைதந்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி. ஆ. வேலுப்பிள்ளை
(ஆ. வேலுப்பிள்ளை அன் சன் பிறண்டிக்கடை, யாழ்ப்பாணம்)
117, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

நா. கந்தசாமி தம்பதிகள்
(க. நாகமுத்து & சன் றூவான்வெல, யாழ்ப்பாணம்)
கருங்காலி, காரைநகர்.

50

## திருமண அழைப்பு

மணமகன்:
மகேந்திரன்
(பொறியியலாளர், U.K.)

மணமகள்:
உதயகுமாரி
(சாந்தா)

இடம்:
சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்
கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

சுபவேளை:
வியாழக்கிழமை 6 - 6 - 1974 மு. ப. 10-45
நண்பகல்: 12-00

உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து இவ்வழைப்பை ஏற்று, வருகைதந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும்படி வேண்டுகிறோம். தனித்தனி அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

வி. இராஜதுரை
(ஓய்வுபெற்ற ஓவசியர்)
திருமதி வி. இராஜதுரை
"கமலவாசா"
நந்தாவில்,
கொக்குவில்.

இ. சபாலிங்கம்
(அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)
திருமதி இ. சபாலிங்கம்
"கற்பகம்"
100, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். 49

## யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
(வரையுள்ளது)

## தேவை

| பதவி | தரம் | சம்பளத் திட்டம் | தகைமைகள் |
|---|---|---|---|
| கிளை முகாமையாளர் | III | 180—320 ............ 810—106 | 6 பாடங்கள் க. பொ. த. (சாதாரண) சித்தியும் ஒருவருடகால அனுபவமும் |

வயது: 21—35 வருடங்கள்.
பின்வருவனவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
2. அண்மையில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.
3. கல்வித்தகைமை, அனுபவம், வசிப்பிடம் சம்பந்தமான சான்றிதழ்கள்.

பிணை: ரொக்கம் ரூபா 1000/-
" ஆதனம் ரூபா 5000/-

விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளருக்கு விலாசமிட்டு கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு 20-6-74 க்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்
யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
(வரையுள்ளது)

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,


**நாகம்ஸ்**
[சுன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப 2-30
நாகேஷ் — விஜயா
**கல்யாண ஊர்வலம்**

REGAL Jaffna
Daily 4-45, 7-00, 9-30pm
Paul Scofield
in
Shakesphere's
KING LEAR

குருபூசை
மானிப்பாய்.
மானிப்பாய் தெற்கு
கைப்பிள்ளையார் ஆலய
நாளை வியாழக்கிழமை
ஞானசம்பந்தர் கு
கொண்டாடப்படவுள்

**சாந்தி** (சங்கானை)
தினசரி 6-30, இரவு
ஞாயிறு பி. ப. 2-3
எம். ஜி. ஆர்- ஜெயல
**கன்னித் தா**

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் 2 நா ளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
**றியோ**
(யாழ் நகரமண்டபம்
தினசரி மாலை 4-45, 7-
**CHRIST OF THE OCEAN**
சமுத்திரத்தின் யேசு பெருமா
MR. JERICO 9-45 only


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
காலை 10-30, 2-30 மாலை 6-30, இரவு 9-45
சிவாஜி-எஸ்.எஸ்.
கண்ணாம்பா
**மனோகரா**

**ஸ்ரீதர் சினிமா**
(யாழ்ப்பாணம்)
கொழும்பிலே
25 வாரத்துக்கு மேல் ஓ
சித்திரம்
தின. 4 காட்சிகள்
**த பொடி THE BODY**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**ராணி சினிமா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஏ.வி.எம். ர
மேஜர் சுந்தரராஜன்
நடித்த
**அன்புச் சகோதரர்கள்**
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சித்

6-வது வாரம்
**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர், ஜெயலலிதா நடித்த
**அன்னமிட்டகை**

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை
இரவு 9-30, சனி, ஞா
காலை 10-30



**ராமன் தேடிய சீதை**
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்:
ப. நீலகண்டன்
இசை:
எம். எஸ். விஸ்வநாதன்

**லிடோ**
[யாழ்ப்பாணம்]
தினசரி
காலை 10-00, பி. ப.
மாலை 6-00, இரவு
முத்துராமன் - ஜெயலலிதா
**சூரியகாந்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபூசை

மானிப்பாய், புதன்
...விப்பாய் தெற்கு வேலக்
...பிள்ளையார் ஆலயத்தில்
வியாழக்கிழமை திரு
...சம்பந்தர் குருபூசை
...ண்டாடப்படவுள்ளது.

...ந்தி (சங்கானை)
...சரி 6-30, இரவு 9-30
...ஞாயிறு பி. ப. 2-30
...ஜி. ஆர்- ஜெயலலிதா
...ன்னித் தாய்

...க மேலும் 2 நாட்க
...ழ் நகரமண்டபம்)
...மாலை 4-45, 7-15
...E OCEAN
...பெருமான்
...5 only


...ஜி-எஸ்.எஸ்.ஆர்.
...ன்னும்பா
...இரவு 9-45 நடித்த
...க ர ா

...காலும்பிலே
...துக்கு மேல் ஓடிய
...சித்திரம்
...கள்
BODY
...களுக்கு மட்டும்

... - ஏ.வி.எம். ராஜன்
... சுந்தரராஜன்
நடித்த
...தரர்கள்
...மேல் ஓடிய சித்திரம்

...வாரம்
...கள்
நடித்த
...கை

தினசரி
... 2-30, மாலை 6-30
...-30, சனி, ஞாயிறு
காலை 10-30


... சீதை
...ஜயலலிதா
...ஷ் - மனோரமா
இசை:
...எஸ். விஸ்வநாதன்

தினசரி
...-00, பி. ப. 2-00
...-00, இரவு 9-00
...லலிதா
...ந்தி


## கோலான் பகுதியில் ஐ. நா. அமைதிப் படை!

ஜெனிவா, ஜூன் 4

சிரிய—இஸ்ரேல் படைவிலகல், கைதிகள் பரிமாற்றம் தொடர்பான இறுதி நடவடிக்கைகள் சம்பந்தமாக ஜெனிவாவில் கூடி ஆராயும் சிரிய—இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் நாளை ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர்.

இதேவேளையில் ஐ. நா. சமாதானப்படை ஒன்று கோலான்குன்றுப் பிரதேசத்தை வந்தடைந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படையினர் கோலான் குன்றுப் பகுதியில் கண்காணிப்பு வேலைகளில் ஈடுபடுவர். இவர்களுடன் பல அவதானிகளும் கோலான் பகுதிக்கு வந்துள்ளனர்.

## நிக்ஸன் அடுத்தவாரம் மேற்காசியா செல்கிறார்

வாஷிங்டன், ஜூன் 4

அமெரிக்கஜனாதிபதிநிக்ஸன் அடுத்தவாரம் மேற்காசியாவுக்கு விஜயம் செய்கிறார்.

இவர் மேற்காசியாவில் கெய்ரோ, இஸ்ரேல், ஜோர்டான், சிரியா, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வார்.

இரண்டாவது உலகமகா யுத்தத்திற்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் செய்ரோவுக்கு விஜயம் செய்வது இதுவே முதல்தடவையாகும். பின்னர் இவர் ரஷ்யாவுக்கும் விஜயம் செய்வார்.

## மரண அறிவித்தல்

இளைப்பாறிய இலங்கை வங்கிப் பிரதம இலிகிதரும், தையல்முத்துவின் அருமைக் கணவரும், புஷ்பராணி, புஷ்பராஜா, காலஞ்சென்ற இராஜலக்சுமி, சண்முகராஜா, சுதந்திரராஜா, சத்தியலக்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பு கனகரத்தினம், திருமதி சனகசபை ஆகியோரின் சகோதரரும், சண்முகசுந்தரம், தவலக்சுமி, பத்மநாதன், கணேஷ்வரன் ஆகியோரின் மாமனுருமான தம்பு சின்னத்துரை ஜூன் 1-ம் திகதி இறைவடிசேர்ந்தார். தாவடி வடக்கு, கொக்குவில். 239

## மயானத்தில் தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

கால்கள் கட்டப்பட்ட நிலையில் மல்லாகம் மயானத்தில் இறந்துகிடக்கக் காணப்பட்ட 30 வயது வாலிபர் ஒருவரின் மரணம் குறித்து நடைபெற்ற மரணவிசாரணையில் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

அளவெட்டியைச் சேர்ந்த எஸ். இராசதுரை என்பவரே இவ்விதம் தற்கொலை செய்துகொண்டவராவார் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தி நஞ்சருந்தியுள்ளார் எனத்தெரிவித்தார் மல்லாகம் மரணவிசாரணை அதிகாரி திரு. பாலசுப்பிரமணியம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

கடந்த சனிக்கிழமை மயானத்தூணுடன் கால்கள் கட்டப்பட்டநிலையில் இவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார். (ஈ)

## பாகிஸ்தான் கலவரம் நீடிக்கிறது: 30 பேர் பலி; 2000 பேர் கைது

லாகூர், ஜூன் 4

பாகிஸ்தானில் இரு பிரிவினருக்கிடையே இடம்பெற்ற கலவரங்களினால் முப்பது பேர் மரணமானார்கள்; 200க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

லியல்பூரில் கடந்த ஆறு நாட்களாக நடைபெற்றுவரும் இக்கலவரங்கள் தொடர்பாக சுமார் 2 ஆயிரம் பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்என்றும் லாகூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகமது முஸ்லிம் பிரிவின் தலைவரை பொலிசார் கைது செய்ததை அடுத்து கலவரம் உச்சக்கட்டத்தை அடைந்ததென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லியால்பூர் மாநிலத்திற்குள் கலகக்காரர்கள் சிறிய மாநிலம் ஒன்றை அமைக்க முயற்சித்துவருகிறார்கள் என்றும் இப்பகுதியிலுள்ள தொலைபேசி தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட கவர்னரையும் பொலிஸ் அதிபரையும் இம்மாநிலத்திற்குள் செல்வதற்கு கலகக்காரர்கள் அனுமதிக்கவில்லையென்றும் தெரிகிறது.

இதேவேளையில் இங்கு ரயில் ஒன்று தடம்புரண்டதால் 3 பேர் கொல்லப்பட்டனர். இது ஒரு சதி முயற்சியாக இருக்கவேண்டும் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இக் கலவரம் பற்றி பாகிஸ்தான் ஆட்சிமன்றத்தில் விவாதம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்று ஐந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டுவந்தனர்.

இக் கலவரம் பற்றி ஆட்சி மன்றத்தில் விவாதம் நடைபெறும் பட்சத்தில் மேலும் விபரீதம் நிகழலாம் என்றும் கலவரம் படுமோசமடையக் கூடும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் ஜுனப் சுல்பிகார் அலிபூட்டோ தெரிவித்தார்.

அராலி கொலை வழக்கு

## 2-ம் எதிரியின் கத்தியை 3-ம்எதிரி பறித்துவெட்டினார்

யாழ்ப்பாணம், புதன்

'நானும் கணவனும், ஓடினோம். 1-ம் எதிரி என்னைத் தாண்டிச் சென்று என்கணவரை வெட்டினார். கணவர் நிலத்தில் விழுந்தபின் எழுந்து ஓடினார். 2-ம் எதிரியின் கத்தியை 3-ம் எதிரி பறித்து வெட்டினார்.

அராலி கொலை வழக்கில் சாட்சியம் அளித்த நவரத்தினம் கைம்பெண் நாகம்மா மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதவான் ரி.ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் அராலியில் 72-ம் ஆண்டு டிசம்பர் 3-ம் தேதி மரியான் தம்பிராசா, மைலன் கனகன், கந்தன் ஆறுமுகம் ஆகியோர் தம்பிப்பிள்ளை நவரத்தினத்தை கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஏ. அமிர்தலிங்கம், சட்டத்தரணி கே. பரமநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் ஆஜரானார்.

நாகம்மா சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:- எதிரிகள் எவரது சொந்தக்காரர்கள் 2-ம் எதிரி என் ஒன்றுவிட்ட சகோதரர் 1-ம், 3-ம் எதிரிகள் என் தூரத்து இனத்தவர்.

சம்பவத்திற்கு முதல்நாள் குளறிசத்தம் கேட்டது. நாங்கள்போய்ப்பார்த்தோம். கனகரத்தினம் தன் மனைவியுடன் கதைத்ததாகக்கூறி 3-ம் எதிரி மனைவியை அடித்தார். சம்பவதினம் நாங்கள் வீட்டில் இருந்தோம் எதிரிகள் வந்து கல்லால் எறிந்தார்கள். மறுபக்கத்தில் கனகரத்தினம், புலேந்திரன் தம்பிப்பிள்ளையும் கல்லால் எறிந்தார்கள். 2-ம் எதிரி ஒரு கையில் கல்லும் வைத்திருந்தார். 3-ம் எதிரி கல்வைத்திருந்தார். 2-ம் எதிரி கூக்குரலிடவே 1ம் எதிரி வெட்டுக்கத்தியுடன் வந்தார். நாங்கள் ஓடினோம் கனகரத்தினம், தம்பிப்பிள்ளை புலேந்திரன் மறுபக்கத்தால் ஓடினார்கள்

சம்பவம் நடந்தபோது நான் 3-ம் எதிரியின்கையைப் பிடித்தேன். அவர் பறித்துக் கொண்டார். திரும்பவும் கணவனை வெட்டினார்கள். நான் ஐயோ எனக்குளறினேன். கனகரத்தினம் ஓடிவந்தார். அவர் 1-ம், 2-ம் எதிரிகளை வாளால் வெட்டினார். அப்போது வாள் தவறிக்கீழே விழுந்து விட்டது. என் கணவர் கீழே விழுந்து கிடந்தார். தண்ணீர் தரும்படி கணவர்

(4-ம் பக்கம் பார்க்க)


# ஓஹோ சோப் இண்டஸ்ட்ரீஸாரின் விசேஷ அறிவித்தல்!

எமது தயாரிப்புகளை வடமாகாணத்திலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் விநியோகம் செய்வதற்கு ஏக விநியோகஸ்தர்களாக

யாழ்ப்பாணம் நவீன சந்தையிலுள்ள

## யாழ்மெற்றல் சேல்ஸ் சென்டர்

ஸ்தாபனத்தாரை

நியமித்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

ஓஹோ தயாரிப்புகளை வாங்கி அதிக லாபமடையுங்கள்

தயாரிப்பாளர்கள்:

# ஓஹோ சோப் இண்டஸ்ட்ரீஸ்

யாழ்ப்பாணம். போன்: 646


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கற்பதை நிறுத்திவிடுபவன் கிழவன் - இருபதோ - எட்டோ, வயது எதுவானாலும் ஒன்றுதான். தொடர்ந்து கற்றுக் கொண்டிருப்பவன் தொடர்ந்தும் இளைஞனாகவே இருப்பான். மனதை இளமையாக வைத்துக் கொள்வதுவே வாழ்க்கையின் மகத்தான அம்சம்.

— ஹென்றி போர்ட்

ஈழநாடு

(5—6—74)

## அமெரிக்காவின் 'அதிசயசாதனை?'

உலகில் நிலவும் பொருளாதார நெருக்கடி பற்றி ஐ. நா. சபை கண்ணீர் விடுகிறது. அதன் பொதுக் காரியதரிசி - திறமையும் நேர்மையும் நிறைந்த டாக்டர் வால்டீம், தம்மாலியன்றளவு உதவித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் தீவிரமான, துரிதமான வேலைகளை மேற்கொண்டுள்ளார்.

வாஷிங்டனிலிருந்து திடுக்கிடும் தகவல்கள் வெளிவருகின்றன. இவை எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாம் உறுதிப்படுத்த முடியாத போதிலும், ஐ. நா. வின் நிவாரண வேலைகளுக்கும், பொதுக்காரியதரிசியின் தியாகமுயற்சிகளுக்கும் இத்தகவல்கள் எவ்வித உற்சாகமும் ஊக்கமும் அளிக்குமென்று கூறமுடியாது.

திடுக்கிடும் தகவல்கள் என்று நாம் குறிப்பிடுவது என்ன? வல்லரசுகளின் போக்கை நாம் தூரநோக்குடன் அவதானித்தால் வளர்ச்சியடையும் நாடுகள் அதிர்ச்சியடைய நியாயம் எதுவுமில்லையென்றே கூற வேண்டும். வியட்னாமில் வல்லரசுகள் கொட்டிய கோடானுகோடி பணத்தைப்பற்றிய புள்ளிவிபரங்கள் இன்றைய உலகின் அவலநிலைக்கு எவ்வித ஆறுதலுமளிக்கமாட்டாது.

தென்வியட்னாமுக்கு ராணுவ உதவியாக அமெரிக்கா இதுகாறும் 88 ஆயிரம் கோடி ரூபாவை (ரூபா 88000,00,00,000) கொட்டிக்குவித்துள்ளதாக பொறுப்புவாய்ந்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் திரு. லெஸ் ஆஸ்பின் தெரிவித்திருக்கிறார். இத்தொகை வடவியட்னாமுக்கு ரஷ்யாவும் சீனாவும் வழங்கிய ராணுவ உதவியின் கூட்டுத்தொகையை விட முப்பது மடங்கு அதிகமாகும் என்பதே இத்தகவலின் திடுக்கிடும் அம்சமாகும்.

வியட்னாம் யுத்தம் ஆசிய மக்களை ஒடுக்கமுயன்ற இயக்கமென்பது ஓர் உண்மை. வடவியட்னாம் மக்கள் தமக்குள்ள இயல்பான வீரத்துடன் போரில் வெற்றிகண்டு நாட்டின் சுதந்திரத்தை பாதுகாக்க முடிந்தது இன்னொரு உண்மை. படைபலமும், பணச்செருக்கும், ஏகாதிபத்திய வல்லரசுகளின் அதிகாரவேட்டையும் சிறுநாடுகளில் பலிக்காதென்பது மூன்றாவது உண்மை.

'வியட்னாம் யுத்தம்' என்ற படத்தின் பிரகாசமான அம்சங்கள் இவ்வாறிருந்தும் இன்று வாஷிங்டன் வெளியிடும் செய்தியை நோக்குங்கால் உலகில் அமைதி நிலவுவதற்கு என்றுமே வழி பிறக்குமா என்ற சந்தேகம் எழுவது இயற்கை.

அமெரிக்க காங்கிரஸ் சபையின் ஜனநாயக கட்சி உறுப்பினரும் ஆயுதப் படைகள் சம்பந்தமான அதிமுக்கிய குழுவின் அங்கத்தவருமான திரு. லெஸ் ஆஸ்பின் தரும் முழுவிபரங்கள் வளர்ச்சியடையும் நாடுகளை விசேஷமாக இலங்கை போன்ற சிறு நாடுகளை சிந்திக்கவைக்கும்.

வடவியட்னாமுக்கு ராணுவ உதவியாக 1966-ம் வருடத்திலிருந்து சோவியத் யூனியன் சுமார் 2056 கோடி ரூபாவையும், சீனா சுமார் 864 கோடி ரூபாவையும் வழங்கியுள்ளதாம். இதற்கு இணையாகவே அமெரிக்கா ராணுவ உதவி அளித்ததாக அமெரிக்க அரசாங்கம் செய்துவரும் பிரசாரம் பொய்யென்று திரு. ஆஸ்பின் புள்ளிவிபரங்களுடன் நிரூபிக்கின்றார்.

இவ்வளவு கோடி பணத்தை அழிவுக்குப் பதிலாக ஆக்கவேலைகளுக்குப் பாவித்தால் வளர்ச்சியடையும் நாடுகள் நிமிர்ந்துவிடுமென்றும், உலகில் அமைதிநிலவ வழி பிறக்குமென்றும் அஞ்சுகின்றன இவ்வல்லரசுகள். இதைவிட வேறென்ன முடிவை நாம் எடுக்கமுடியும்?

அமெரிக்காவின் இவ்வரிய சாதனையை அம்பலப்படுத்தும் உரிமை அங்குள்ள பத்திரிகைகளுக்குண்டென்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

## கண்டியில் 2 ஹோட்டல்கள் சுவீகரிப்பு

கண்டி, செவ்.

'கண்டியில் உள்ள இரண்டு பிரபல ஹோட்டல்களான குயின்ஸ் ஹோட்டலையும், ஹோட்டல் சுயிஸையும் அரசாங்கம் பொறுப்பேற்க உள்ளது. இம்மாதம் 9-ம் திகதி ஹோட்டல் கூட்டுத்தாபனம் இவற்றைப் பொறுப்பேற்கும்'

அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் தலைமையில் கண்டியில் கட்டிடப்பொருள் கூட்டுத்தாபனக் கிளை திறப்பு விழா நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு பேசுகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதம அமைப்பாளர் திரு. அனுராரத்வத்தை இத்தகவலை வெளியிட்டார். (ஈ)


## இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட சுன்னாகம் பொதுசன நூல்நிலையம் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டபிள்யு. . வி. எஸ். டி. அல்விஸினால் இன்று 5-ம் திகதி மாலை திறந்து வைக்கப்படவுள்ளது. (ஈ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நல்லூர் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974 ஜூன் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box No. 49, Jaffna Telegram "Eelanadu" Telephone: 389.



நெடுந்தீவு பனம்பொருள் ஆய்வுக்குழு 'மில்க்வைற்' தொழில் அதிபர் திரு. க. கனகராஜாவுக்கு 'பூவுலக கற்பகதரு நாயகர்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. ஆய்வுக்குழு சார்பில் திரு. சி. வ. சங்கரப்பிள்ளை அப் பட்டத்தை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (ஈ)

## வான் விபத்தில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், புதன்

ஆனையிறவுத் தடைமுகாமுக்கு அண்மையில் வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

வானில் இருந்த இரத்தினபுரியைச் சேர்ந்த தர்மரத்தினம் (24 வயது) என்பவரே மாண்டவராவார். இதிலிருந்த ஏனைய மூவரில் சிததன்கேணியைச் சேர்ந்த சண்முகம் கந்தசாமி, சாரதியான அஸீஸ், இராமசாமி ஆகியோர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரணமானவரின் கைவிரல்கள் ஆங்காங்கே துண்டிக்கப்பட்ட நிலையில் சிதறிக்கிடந்தன. கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (ஈ)

## மேலதிக செயலாளர்

கொழும்பு, செவ்வாய்

திரு. திஸ்ஸ விஜயரத்தின பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பாதுகாப்பு வெளிவிவகார பிரதி அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியுடன் சேர்ந்து கடமையாற்றுவார்.

இவர் முன்னர் பிரான்சின் இலங்கைத் தூதராகக் கடமையாற்றினார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டார். அங்கே வந்த சோமசுந்தரம் தண்ணீர் கொடுத்தார்.

கந்தப்பு சோமசுந்தரம், த. கனகரத்தினம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். விசாரணை நாளை காலைவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

## இ. ச. ஊழியர்களுக்கு சம்பளமில்லை

எழுவைதீவு, செவ்

எழுவைதீவு கிராமசபையைச் சேர்ந்த ஊழியர்கள் கடந்த ஆறு மாதங்களாக சம்பளம் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட இக் கிராமசபையில் ஒரே ஒரு அங்கத்தவர் மட்டுமே தற்போது பதவியில் இருக்கிறார். ஏனைய நால்வரும் ராஜினாமாச் செய்துவிட்டனர். இதனால் இவ்வருடத்துக்கான 'பட்ஜட்' கிராமசபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனாலேயே இங்கு பணிபுரியும் நான்கு ஊழியர்களும் சம்பளத்தைப் பெறமுடியாதிருக்கிறது என்று கூறப்படுகிறது. (ஈ)

## சித்தாந்த பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை இவ்வாண்டு நடாத்திய சித்தாந்தபரீட்சை முடிவுகள் பின்வருமாறு:

### சித்தாந்த பிரவேச பண்டிதர்

திரு. பொ. விநாயகமூர்த்தி (3-ம் பிரிவுச்சித்தி), திரு. சிவ. ஆறுமுகசாமி நூன சித்தி (இலக்கணம்).

### சித்தாந்த பாலபண்டிதர்

திரு. வ. சண்முகராசா (2-ம் பிரிவுச்சித்தி) செல்வி பொ. ஜெகதீஸ்வரி (2-ம் பிரிவுச் சித்தி), செல்வி பொ. சந்திரகாந்தியம்மா (3-ம் பிரிவுச் சித்தி), செல்வி பொ. சகுந்தலாதேவி (3-ம் பிரிவுச்சித்தி) (ஈ)

## சங்கராச்சாரிய சுவாமிகளுக்கு 81 வயது

சென்னை, ஜூன் 4

காஞ்சி காமகோடிபீடத்தின் பீடாதிபதியாக இருந்த சங்கராச்சாரிய சுவாமிகளின் 81வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது. காமகோடிபீடத்தின் பொறுப்புகளை ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் ஒப்படைத்துவிட்டு சுவாமிகள் தேனம்பேட்டையில் ஒரு குடிசையில் வாழ்ந்து வருகின்றார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் இன்று அவரை தரிசித்தனர்.

## ஐந்தாம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பாடசாலைகளிலேயே பரீட்சையை நடத்தி முதன்மை பெறும் பத்து சதவீத மாணவர்களைத் தெரிந்தெடுத்து பின்னர் புலமைப்பரிசில் தேர்வை கல்வி இலாகா நடத்துமென்றும் பரீட்சைக் கமிஷனர் தெரிவித்தார். (ஈ)

## நாடும் நடப்பும்

ஒரு சங்கக்கடையில் சில வாரங்களுக்கு முன்னர் தராசு சரியாக இல்லையென்றும் வாங்கும் பொருள்களை வேறு தராசில் நிறுத்துப் பார்த்தால் குறைவாக இருக்கிறதென்றும் அங்கு பங்கீட்டுப் பொருள்கள் வாங்கும் சிலர் புகார் செய்தனர். ஒருநாள் ஒருவர் அதைக் கையும் மெய்யுமாக நிரூபித்துக் காட்டிவிட்டார். ஒரு றுத்தலுக்கு முக்கால் அவுன்ஸ் குறைந்திருந்தது. பின்னர் முக்கால அவுன்ஸ் எடையுள்ள ஒரு கல்லு அந்தத் தராசில் ஒரு பக்கத்தில் தொங்கவிடப்பட்டது. இன்னமும் அந்தக் கல் தராசில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த முக்கால் அவுன்ஸ் குறைவுபற்றிக் கணக்குப் பார்த்து ஒரன்பர் தெரிவித்த விபரத்தை இங்கு தருகிறேன்.

### சீனி

ஓர் இறாத்தலுக்கு ¾ அவுன்ஸ் குறைவு. 1500 கூப்பனுக்கு ஒரு மாதத்திற்கு 15000 றாத்தல் சீனியின் குறைவு 1125 அவுன்ஸ் அல்லது 70 றாத்தல். 70 றாத்தல் சீனியின் தற்போதைய விலை 350/-

### மா

ஓர் றாத்தலுக்கு ¾ அவுன்ஸ் குறைவு. 1500 கூப்பனுக்கு ஒரு கிழமைக்கு ½ றாத்தல் விகிதப்படி 750 றாத்தல் மாவின் குறைவு 560 அவுன்ஸ் அல்லது 35 றாத்தல் மா. ஃ ஒரு மாதம் அல்லது 4 கிழமைக்கு 35x4 = 140 றாத். 140 றாத். மா.

### அரிசி

ஓர் றாத்தலுக்கு ¾ அவுன்ஸ் வீதம் 1500 கூப்பனுக்கு ஒரு கிழமைக்கு 2 றாத். வீதம் 3000 றாத். அரிசியின் குறைவு 2250 அவுன்ஸ் அல்லது 140 றாத்தல். ஃ ஒரு மாதம் அல்லது 4 கிழமைக்கு 140x4 = 560 றாத். அரிசி.

ஃ ஃ ஃ

சங்கக்கடைகளில் தராசுபடிகளை அடிக்கடி பரிசோதனை செய்ய வேண்டும் சங்கக்கடைகளில் என்றாலும் தராசு சரியில்லை படி பிழை என்று சொல்லக்கூடியதாயிருக்கிறது. வேறு தனியார் கடைகளில் சொல்லமுடியுமா?

எல்லாக் கடைகளிலுமே தராசுகள் மற்றும் அளவுகள் அடிக்கடி பரிசோதிக்கப்படுவது பொதுமக்களுக்கு மட்டுமல்ல 'சோட்டேஜ்' காரணமாக வேலையையே இழக்க நேரிடும் மனேஜர்மார்களுக்கும் நல்லது.

ஓர் அவுன்ஸ் அரை அவுன்ஸ் சீரகம், வெந்தயம் நிறுப்பதற்குப் பெரிய தராசுகளை உபயோகிக்காமல் சிறிய தராசுகளை உபயோகிப்பது நல்லது.

## ஊர் சுற்றி

## மரண அறிவித்தல்

### மளவராயர் சின்னத்தம்பி

கைதடி மலையன் பெலசனியர் மளவராயர் சின்னத்தம்பி காலமாகிவிட்டார். இவர் ஞானம்மாவின் அன்புக் கணவரும் மலேசியா மார்க்கண்டன் கமலாம்பிகை, மனோன்மணி, பரமேஸ்வரி, யோகேஸ்வரி, இராசேஸ்வரி, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புத் தந்தையும் அஞ்சலசங்கரப்பிள்ளை, சிவராமலிங்கம், சண்முகநாதன், சிறி, காலம் சென்ற வரதராசா ஆகியோரின் மாமனாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை காலை 10 மணி 6.6.74 கைதடி மயானத்தில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இந்த தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் சி. மு. துரையப்பா

59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org